நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
எம்.ஆர்.சி. நகர். சென்னை—28.

ந.க..எண். 50977/2018/டிபி3 நாள். 07.03.2019.

## சுற்றறிக்கை

பொருள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019 – உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கல் – தொழில் சார்ந்த வல்லுநர்கள் நியமனம் செய்தல் குறித்த நடைமுறைகள் – சம்பந்தமாக.

பார்வை:

1. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019.
2. தமிழ்நாடு அரசிதழ் எண். 43, பகுதி III பிரிவு 1(a) நாள். 04.02.2019.
3. இவ்வலுவலக சுற்றறிக்கை நாள். 05.03.2019.

*********

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 வெளியிடப்பட்டுள்ள நிலையில் விதி 23—ன் படி கீழ்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. பதிவு பெற்ற கட்டிட வடிவமைப்பாளர்கள் (Architects) (2) பொறியாளர்கள் (Engineers) (3), கட்டமைப்பு பொறியாளர்கள் (Structural Engineer) (4) கட்டிட அபிவிருத்தியாளர்கள் (Construction Engineers) (5) தரத் தணிக்கையாளர் (Quality auditors) (6) நகரமைப்பு வல்லுனர் (Town Planner) மற்றும் (7) அபிவிருத்தியாளர் (Developers) முதலான தொழில் சார்ந்த வல்லுநர்கள் மாநகராட்சி / நகராட்சியில் பதிவு செய்வது சம்பந்தமாக விபரங்கள் வழங்கப் பட்டுள்ளதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு செயல்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

   *"மாநகராட்சி / நகராட்சிகளில் பதிவு பெற்ற வரைபட வரைவாளர்கள் நியமனம் செய்து வருடந்தோறும் அல்லது **3** வருடங்களுக்கு ஒருமுறை உரிமை புதுப்பிக்கும் நடைமுறை உள்ளது. மேற்காணும் உரிமம் **மார்ச் 31—ல்** முடிவடையும் என்பதால், மேற்காணும் உரிமக் காலம் முடியும் வரை மேற்படி நபர்களை வரைபடங்களில் கையொப்பமிட அனுமதிக்க வேண்டும்."*

2. புதிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகளின்படி 01.04.2019 முதல் நகராட்சி நிர்வாக ஆணையரால் உருவாக்கப்படும் Screening Committeeயில் சான்று பெற்ற நபர்களை மட்டுமே பதிவு செய்ய வேண்டும்.

3. இதற்கான Screening Committee குழு ஒன்றை கீழ்காணும் உறுப்பினர்களை கொண்டு அமைக்க உத்தரவிடப்படுகிறது.

மாநகராட்சிகள் / சிறப்பு நிலை நகராட்சியில்

| | உறுப்பினர்கள் | | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | செயற்பொறியாளர்(திட்டம்) / முதுநிலை நகரமைப்பு அலுவலர் | : | 1 |
| 2. | உதவி செயற்பொறியாளர் (திட்டம்) / நகரமைப்பு ஆய்வர்கள் | : | 2 |
| 3. | உதவி ஆணையர்கள் | : | 2 |

நகராட்சிகள்

| | உறுப்பினர்கள் | | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நகராட்சி ஆணையர் | : | 1 |
| 2 | நகரமைப்பு அலுவலர்/ பொறியாளர் | | 1 |
| 3 | நகரமைப்பு ஆய்வாளர் | : | 1 |

4. பதிவு செய்ய கோரும் தொழில் சார்ந்த வல்லுனர்களுக்கான தகுதி, பதிவு செய்யும் வழிமுறை அவர்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ல் விதி 23 மற்றும் இணைப்பு XIII ல் குறிப்பிட்டவாறு இருக்க வேண்டும்.

5. தொழிற் சார்ந்த வல்லுனர்கள் பதிவு செய்யும்போது உரிய அடையாள அட்டை / ஆளறிச் சான்று / ஆதார் அட்டை மற்றும் புகைப்படத்துடன் பெற்று Online இணையதளம் வாயிலாக பதிவு செய்ய வேண்டும்.

6. பரிசோதனைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரரிடம் ரூ.5,000/– (ஐந்து ஆயிரம் மட்டும்) பதிவுக் கட்டணமாக பெற்றுக்கொண்டு பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட " தொழில் சார்ந்த" வல்லுனர்களின் பதிவேடு பராமரிப்பதுடன், விபரப் பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் புதுநிலைப்படத்தி ஏப்ரல் மாதத்தில் மன்றத்தின் பார்வைக்காக வைக்க வேண்டும் மற்றும் அலுவல் சார்ந்த வலைதளத்தில் பதிவிட வேண்டும்.

7. பதிவு செய்யப்பட்ட "தொழிற் சார்ந்த வல்லுனர்கள்" தவறுசெய்யும் நிலையில் உரிய விதிமுறைகளை பின்பற்றி அவர்களின் பதிவினை ரத்து செய்து அதன் விபரத்தை மன்றத்தின் பார்வைக்கு வைப்பதோடு, உள்ளாட்சி அலுவலக வலைதளத்திலும் பதிவிட வேண்டும். *(மாதிரி படிவம் இணைக்கப்பட்டுள்ளது)*

மேற்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர் களை கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:–** மாதிரி படிவங்கள்.

ஒம்/–தா.கார்த்திகேயன்
நகராட்சி நிர்வாக ஆணையர்

**பெறுநர்–** அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்
நகல்– அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

07/03/19
கண்காணிப்பாளர்